# கணக்கீடு

## பயிற்சி வினாக்கள் - 10.5.1



## பயிற்சி வினாக்கள்

**Q1 பங்குடைமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றை தெரிவு செய்க**

A - பங்குடைமைக்கு ஒப்பந்தம் ஒன்றிருத்தல் கட்டாயமானது

B - பங்காளர் ஒருவர் வருட ஆரம்பத்தில் அல்லது இறுதியில் மட்டுமே விலக முடியும்

C - பங்காளரது மூலதன மீதிகளுக்கு ஏற்ப இலாப நட்ட விகிதம் காணப்படும்

D - இளைப்பாறும் பங்காளருக்கு செலுத்த வேண்டிய தொகை 5% கடன் கணக்கிற்கு மாற்ற வேண்டும் என பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவு கூறுகின்றது

1) ABCD 2) AC 3) AD 4) ACD 5) A மட்டும்

**Q2** இலாப நட்டங்களை 2:1:1 என பகிரும் பங்குடைமையில் X, Y, Z என்போர் பங்காளர்களாவர். 01.04.2018 இல் பங்காளர் மூலதன மீதிகள் முறையே ரூ.132000, ரூ.108000, ரூ.92000 ஆகும். இத்தினத்தில் நடைமுறைக் கணக்கு மீதிகள் முறையே ரூ.18000, ரூ.12000, ரூ.8000

01.04.2018 இல் Y இளைப்பாறினார் இத்தினத்தில் இவருக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% உடனடியாக செலுத்தப்பட்டு மிகுதி 10% கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இக்கடன் தொகையும் வட்டியும் 31.03.2019 வருட முடிவில் ரூபா 77000 ஆக செலுத்தப்பட்டது. இளைப்பாறிய தினத்தில் நிறுவனத்தின் மொத்த நன்மதிப்பு யாது?

1) ரூ.50000 2) ரூ.60000 3) ரூ.40000 4) ரூ.80000 5) ரூ.100000

**கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்களினை கருத்திலெடுத்து 3, 4 ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக**

ஒரு பங்குடைமையில் பக்தியும் முக்தியும் இலாப நட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள். இவர்களது பங்குடைமையின் பங்காளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு மூலதன வட்டி முறையே ரூ.12000, ரூ.10000, ஆகும். பங்காளர் ஆரம்ப மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 5% வட்டிக்கு உரித்துண்டு. முக்திக்கு ஆண்டுச் சம்பளமாக ரூ.15000 க்கு உரித்துண்டு. ஆண்டுகாலத்தில் பக்தி ரூ.5000 தொகையை பற்றினார். ஆண்டு காலத்தில் மேலதிக மூலதனம் ஈடுபடுத்தப்படவில்லை.

**ஆரம்ப இறுதி நடைமுறைக்கணக்கு மீதிகள் முறையே**

| | 31.03.2019 | 01.04.2018 | |
|---|---|---|---|
| பக்தி | 49000 | 12000 | (செலவு) |
| முக்தி | 40000 | 5000 | (வரவு) |



**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**Q3** பகிர்வுக்கு உட்படுத்தக்கூடிய மொத்த இலாபம் என்ன?

1) ரூ.50000 2) ரூ.87000 3) ரூ.37000 4) ரூ.42000 5) ரூ.22000

**Q4** 31.03.2019 இல் மொத்த உரிமை யாது?

1) ரூ.529000 2) ரூ.440000 3) ரூ.524000 4) ரூ.420000 5) ரூ.500000

**கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்களினை கருத்திலெடுத்து 5, 6, 7, 8 ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக**

ஒரு பங்குடைமையில் ராமுவும் சோமுவும் இலாப நட்டங்களை சமனாக பகிரும் பங்காளர்கள். 01.04.2018 இல் தாமு என்பவர் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். இத்தினத்தில் நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்கள் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்பட்டது. தாமு தனது மூலதனத்திற்கு ரூ.120000 காசினை ஈடுபடுத்தினர். புதிய இலாபநட்ட விகிதம் 2:2:1 மூலதனத்திற்கு ஆண்டு 10% வட்டி சோமுவுக்கும் தாமுவுக்கும் ஆண்டுச் சம்பளங்கள் முறையே ரூ.24000, ரூ.12000. பங்காளர்கள் தமது 1/2 ஆண்டுக்குரிய மூலதன வட்டியாக முறையே ரூ.10500, ரூ.9500, ரூ.5000 எடுத்திருந்தனர். சோமு ஆண்டு காலத்தில் ரூ.10000 தொகையை பற்றியிருந்தார்

31.03.2019 இல் மொத்த உரிமையும் 01.04.2018 இல் நடைமுறைக் கணக்கு மீதியும் வருமாறு

| | மொத்த உரிமை | நடைமுறைக் கணக்கு | |
|---|---|---|---|
| ராமு | 261000 | 20500 | செலவு |
| சோமு | 223000 | 10500 | வரவு |
| தாமு | 127000 | | |

**Q5** 31.03.2019 இல் உள்ளவாறான பங்காளர் நடைமுறைக் கணக்கு மீதிகள் யாது?

| | ராமு | சோமு | தாமு |
|---|---|---|---|
| 1) | 53000 | 28000 | 27000 |
| 2) | 51000 | 33000 | 17000 |
| 3) | 41000 | 33000 | 27000 |
| 4) | 51000 | 23000 | 27000 |
| 5) | 51000 | 33000 | 27000 |

**Q6** 31.03.2019 முடிவடைந்த நிதியாண்டுக்கான பகிரக்கூடிய மொத்த தேறிய இலாபம் யாது?


1) ரூ.126000 2) ரூ.136000 3) ரூ.50000 4) ரூ.156000 5) ரூ.86000



**தொகுப்பு** : திரு.சி.திருக்குமரன் ஆசிரியர் - கணக்கீடு (யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

**கணினி வடிவமைப்பு** : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**Q7** பங்காளர் சேரலின்போது நிறுவன நன்மதிப்பு யாது?

1) ரூ.120000 2) ரூ.80000 3) ரூ.200000 4) ரூ.100000 5) ரூ.50000

**Q8** 01.04.2018 இல் பங்குடைமையின் தேறிய சொத்து யாது? (தாமு சேர முன்னர்)

1) ரூ.380000 2) ரூ.390000 3) ரூ.370000 4) ரூ.300000 5) ரூ.350000

**கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்களினை கருத்திலெடுத்து 9, 10, 11 ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக**

ஒரு பங்குடைமையில் ராம், சாம், ரோம் என்போர் இலாப நட்டங்களை 5:3:2 என பகிரும் பங்காளர்கள், பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டியும் ராமுக்கும் ரோமுக்கும் காலாண்டுச் சம்பளமாக ரூ.4000, ரூ.3000 வழங்கப்பட வேண்டும். சாம் ஆண்டில் ரூ.5000 தொகையை பற்றியதுடன் பங்காளர்கள் ஒவ்வொருவரும் அரையாண்டுச் சம்பளத்தை எடுத்திருந்தனர்.

ரோம் 31.03.2019 இல் பங்குடைமையிலிருந்து விலகினார். நன்மதிப்பு ரூ.200000 மூலதன கணக்கினூடாக சீராக்கப்பட்டதுடன் ராமும் சாமும் இலாப நட்டங்களை சமனாக பகிர்வு செய்தனர். 31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டின் பங்காளருக்கிடையே இறுதியாக பகிரக்கூடிய இலாபம் ரூ.60000 நிறுவன 01.04.2018 இல் உள்ள மூலதன மீதியும் 31.03.2019 இல் உள்ள நடைமுறைக் கணக்கும் வருமாறு

| | மூலதனக் கணக்கு | பங்காளர் நடைமுறைக் கணக்கு |
|---|---|---|
| ராம் | 240000 | 90000 |
| சாம் | 200000 | 50000 |
| ரோம் | 180000 | |

**01.04.2018 இல் ரோமின் நடைமுறை கணக்கு மீதி வரவு ரூ.44000**

**Q9** 31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறிய இலாபம் யாது?

1) ரூ.60000 2) ரூ.150000 3) ரூ.120000 4) ரூ.90000 5) ரூ.80000

**Q10** ரோமுக்கு இளைப்பாறும் போது செலுத்த வேண்டிய தொகை யாது?

1) ரூ.300000 2) ரூ.220000 3) ரூ.212000 4) ரூ.210000 5) ரூ.152000

**Q11** பங்குடைமையின் 01.04.2018 இல் தேறிய சொத்து யாது?

1) ரூ.620000 2) ரூ.621000 3) ரூ.619000 4) ரூ.752000 5) ரூ.742000





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பங்குடைமையில் மதனும் சுதனும் இலாப நட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் பங்குடைமையின் ஏடுகளில் உள்ள மீதிகள் வருமாறு

| | மதன் | சுதன் |
|---|---|---|
| 01.04.2018 இல் மூலதனம் | 200000 | 150000 |
| 01.04.2018 இல் நடைமுறைக்கணக்கு | 30000 | (20000) |
| செலுத்திய மூலதன வட்டி | 8000 | 6000 |
| செலுத்திய சம்பளம் | 12500 | 10000 |
| பற்று | 5000 | 3000 |

பங்காளர்கள் தமது 1/2 ஆண்டு மூலதன வட்டியை பெற்றிருந்ததுடன் தமது காலாண்டு சம்பளத்தையும் எடுத்திருந்தனர். 31.03.2017 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ.225000

**Q12** 31.03.2019 இல் பங்குடைமையின் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

……………………………………………………………………………………………………

**கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்களினை கருத்திலெடுத்து 13, 14, 15 ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக**

பங்குடைமையொன்றில் கவி, புவி, என்போர் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிரும் பங்காளர்களாவார். பங்காளர் மூலதன மீதிக்கு 10% வட்டியும் புவியின் ஆண்டுச் சம்பளமாக ரூ.15000 ஆகும். 01.04.2018 இல் பங்காளர் மூலதன, நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு

| | மூலதனம் | நடைமுறைக் கணக்கு |
|---|---|---|
| கவி | 240000 | 15000 |
| புவி | 160000 | (10000) |

01.04.2018 இல் ரவி ரூ.160000 மூலதனப் பங்களிப்புடன் புதிய பங்காளராக இணைக்கப்பட்டார். இவர் 1/5 பங்கு உரித்துடன் சேர்க்கப்பட்டார். கவியும் புவியும் இலாபநட்டங்களை சமனாக பகிர ஒப்புக்கொண்டனர். நன்மதிப்பு கணக்கு ஏற்படுத்தாது மூலதனக் கணக்கில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டது. 31.03.2017 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் 150000 ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தன. 31.03.2019 இல் ரவி மூலதன மீதி ரூ.150000





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**Q13** நன்மதிப்பு தொகை யாது?

……………………………………………………………………………………………..

**Q14** நன்மதிப்பு சீராக்கத்திற்கான குறிப்பேட்டு பதிவுகள் எவை?

……………………………………………………………………………………………..

**Q15** 31.03.2017 தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

………………………………………………………………………………………………

**Q16** காந்தி சாந்தி நிசாந்தி என்போர் இலாபநட்டங்களை 2:1:1 என பகிரும் பங்காளர்கள் 01.04.2018 இல் இவர்களது மூலதன கணக்கு மீதிகள் முறையே ரூ.240000, ரூ.200000, ரூ.180000 ஆகும். 01.04.2018 இல் இவர்களது நடைமுறைக் கணக்கு மீதிகள் முறையே ரூ.18000, ரூ.12000, ரூ.(10000) ஆகும். 01.04.2018 இல் காந்தி இளைப்பாறினார் நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்கள் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படும். காந்திக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% செலுத்தப்பட்டு மிகுதி கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. கடன் கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகை ரூ.147000 ஆகும்.

**அ** நன்மதிப்பு சீராக்கத்திற்கான குறிப்பேட்டு பதிவை தருக?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

**ஆ** இளைப்பாறும் பங்காளனுக்குரிய தொகைக்கான சீராக்கத்திற்குரிய இரட்டை பதிவு யாது?

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

**இ** நிறுவன நன்மதிப்பு தொகை யாது?

……………………………………………………………………………………………..



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk